**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 25/2018 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | திருமதி. ராஜகுமாரி |
| Father's Name/Husband Name: | | திரு. சடையப்பன் |
| Village | : | ஒலைப்பாடி |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 04.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி மாவீரன் என்கிற தியாகராஜன் என்பவர் காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். அவர் சார்பில் அவருடைய வழக்கறிஞர் 317 கு.விமு.ச மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஓலைப்பாடி கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி செல்லப்பாங்கி மற்றும் பெரியசாமி என்னுடைய மாமியார் மாமனார் ஆவார்கள். அவர்கள் தற்போது வழக்கு சம்பவத்திற்கு பின்னர் உடல்நலக் குறைவால் இறந்து போய்விட்டார்கள். கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு சாட்சி செல்லப்பாங்கி எனது மாமியார் ஓலைப்பாடியில் உள்ள எங்கள் வீட்டின் மாடியில் குடியிருந்து கீழ்ப்பகுதியில் உள்ள கொட்டகையில் தனியாக சமைத்து வாழ்ந்து வந்தார். ஒரு நாள் இரவு அவர் சத்தம் போட்டு கத்தினார். அவர் காதில் அணிந்திருந்த தோட்டினை இருட்டில் ஒரு நபர் பறித்துக் கொண்டு சென்றதாக சொல்லி கத்திக் கொண்டிருந்தார். மற்ற ஊர்க்காரர்களும் அங்கு இருந்தார்கள். வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த நாங்கள் வெளியே வந்து பார்த்து விபரம் கேட்டு தோட்டினை பறித்துச் சென்ற நபரினை தேடிப்பார்த்தோம். அவரை கண்டு பிடிக்க இயலவில்லை. மயக்க நிலையில் இருந்த

என்னுடைய மாமியாரை 108 ஆம்புலன்சு மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். என்னுடைய மாமியார் மருத்துவமனையில் இருந்த போது போலிசார் விசாரித்து அவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னுடைய மாமியார் கைரேகை செய்வது வழக்கம். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடைய மாமியார் செய்தது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மாமியார் மருத்துவமனையில் இருக்கும்போது என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கும்போது எனது மாமியாரின் நகையை எந்த எதிரி எடுத்துச் சென்றார் என்று பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைத் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.